இலவச வெளியீடு:

உ

சிவமயம்



# கேதாரீஸ்வரர் விரதமகிமை

1-11-86ல்

வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயத்தில்
(நாச்சிமார்கோவில்)

## கேதார கௌரி விரதநாளன்று

வெளியிடப்பெற்றது.

★

வெளியிடுவோர்:

அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ்
9, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.
போன்: 24822, 23482

உ

சிவமயம்

# கேதாரீஸ்வரர் விரதமகிமை

1-11-86ல்

வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயத்தில்

(நாச்சிமார்கோவில்)

## கேதார கௌரி விரதநாளன்று

எம்மைப் பெற்று, வளர்த்து ஆளாக்கிய

எமது பெற்றோர்

## திரு. சின்னையா முத்துக்குமாரு

## திருமதி செல்லம்மா முத்துக்குமாரு

அவர்களின் ஞாபகார்த்தமாக

வெளியிடப்பெற்றது.

*

வெளியிடுவோர்:

அம்பிகாபதி பான்ஸி றேடர்ஸ்

9, நவீனசந்தை — யாழ்ப்பாணம்.

போன்: 24822, 23482

சிவமயம்

# கேதாரீஸ்வரர் விரதம்

### காப்பு

தாரணைய கூந்தற் கவுரி பியற்றியகே
தார விரதகதை யான்படிக்கச் — சீரிலகும்
ஐந்துகரத் தந்திமுகத் தண்ணலடி யார்க்கருளுங்
கந்தமலர்ச் செஞ்சரணே காப்பு.

## வரலாறும் அனுட்டிக்கும் முறைகளும், பயன்களும்

கேதாரம் இமாலய பர்வதத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். கேதாரீஸ்வரரைக் குறித்து உமாபிராட்டியார் அநுட்டித்த விரதமே கேதாரீஸ்வரர் விரதமாகும். இது ஐப்பசி மாதத்துக் கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசித் திதியிலே அனுட்டிக்கப்படுவது. புரட்டாதி மாதப் பூர்வபக்கத்து அட்டமித் திதிமுதல் அமாவாசை வரையுள்ள இருபத்தொரு நாள்கள், அல்லது அபரபக்கப் பிரதமை முதல் சதுர்த்தசி முடியவுள்ள பதினான்கு நாட்கள், அல்லது அட்டமி முதல் சதுர்த்தசி முடியவுள்ள ஏழுநாட்கள் அல்லது கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசித் திதியிலன்று அநுட்டிக்கப்படும்.

இவ்விரத நாட்களில் இருபத்தொரு இழையினாலான காப்பை ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக்கொள்ளுதல் வேண்டும். முதல் இருபது நாளும் விரதம் அனுட்டித்துச் சூரியாஸ்தமனத்தின் பின் போசனம் செய்து இரவிலே தர்ப்பை அல்லது புல்லினாற் செய்த பாயில் சயனித்தல்வேண்டும். இறுதி நாளாகிய சதுர்த்தசியிலன்று உபவாசமாக இருந்து சிவபூசை செய்து காப்பினை அணிந்து கொள்ளவேண்டும். மறுநாள் உதயத்தில் பாரணம் பண்ணுதல்வேண்டும்.

ஆதிகாலத்திலே திருக்கைலாசத்திலே பார்வதி சமேதராகப் பரமேஸ்வரன் வீற்றிருந்தருளினார். சகல தேவர்களும் முனிவர்களும் வந்து வந்து பார்வதி பரமேஸ்வரரைப் பிரதட்சிணம் செய்து வணங்கிச் சென்றனர். இங்ஙனமாக ஒருநாள் பிருங்கி என்னும் முனிவர் யாவரும் நகைக்கும்வண்ணம் விகடக் கூத்தாடி நடித்தார். அங்ஙனம் நடித்துப் பரமேஸ்வரனை மாத்திரம் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கிப் பார்வதியை வணங்காது சென்றார். பார்வதி கோபங்கொண்டு "முப்பத்து முக்கோடி தேவர்களும் முனிவர்களும் யாவரும் எம் இருவர்களையும் பிரதக்ஷிணம் செய்து வணங்கிச் செல்ல பிருங்கி முனிவர் மாத்திரம் நம்மை வணங்காது செல்கின்றானே. இம் முனிவன் செயலுக்குக் காரணம் என்ன?" எனப் பரமேஸ்வரனைப் பார்த்துக் கூறியருளினார்.

பரமேஸ்வரன், "பார்வதியே! பிருங்கி முனிவன் பாக்கியத்தை விரும்பினவனல்ல. மோட்சத்தை விரும்பினவன் மௌன நிலை வகித்த பெருந்தவமுடையவன். காரணப் பொருள் ஒன்றேயெனக் கருதுபவன். மற்றொன்றிருப்பதாகக் கருதாதவன். ஆதலினால் என்னைப் பிரதக்ஷிணஞ் செய்தான். உனக்கு அங்ஙனஞ் செய்யவில்லை" எனக் கூறியருளினார்.

அத்தருணம் சென்றுகொண்டிருந்த முனிவரைப் பார்வதிதேவி பார்த்து, "பிருங்கி முனியே, உனது உடம்பிலுள்ள இரத்தம் மாமிசம் என்பன எனது அம்சமாதலின் அவற்றைக் கொடு" எனக் கூறினார். முனிவர் உடனே தனது உடம்பிலுள்ள மாமிசம் இரத்தம் என்பவற்றை உதறிக் கொட்டிவிட்டார். அதனால் அவரது உடல் வலிமை நீங்கிவிட்டது. நிற்கமுடியாத நிலைமையேற்பட்டது.

வருத்தத்துடன் நிற்கின்ற பிருங்கி முனிவரைப் பார்த்து "உனக்கு இந்தநிலை ஏன் வந்தது?" என இறைவன் கேட்டார்.

அதற்குப் பிருங்கி முனிவர், "சுவாமி, தன்னை விலக்கி தங்களைத் தனித்துப் பிரதக்ஷிணஞ் செய்து வணங்கியதற்

குத் தேவி தந்த தண்டனை இது என விண்ணப்பித்து நின்றார். பரமேஸ்வரன் கருணை கூர்ந்து ஒரு தண்டைக் கொடுப்ப, அதனையூன்றுகோலாகக் கொண்டு தன் ஆசிரமம் போய்ச் சேர்ந்தார். பார்வதிதேவியார் தன்னை வணங்காத முனிவருக்குப் பரமேஸ்வரன் தண்டுகொடுத்து உதவிசெய்தாரே என்று மிகுந்த சினம்கொண்டு திருக்கைலாச கிரியைவிட்டுப் பூவுலகத்துக்கு வந்தார். வந்து கௌதம முனிவரது ஆசிரமத்தை அடைந்து ஒரு வில்வ மரத்தடியில் இருந்தார். பன்னிரண்டு ஆண்டுகள் மழையில்லாமையினுல் எரிந்து கருகியிருந்த அந்த ஆச்சிரமத்து நந்தவனத்து மரங்களெல்லாம் துளிர்த்துப் பூத்து எங்கும் நறுமணம் வீசின. அந்தப் பூங்கா மிகுந்த அழகுடன் விளங்கியது.

தர்ப்பை கொய்து வருவதற்காக வெளியே சென்று திரும்பிவந்த கௌதம முனிவர் தமது ஆசிரமத்து நந்தவனம் மிகுந்த பொலிவுடன் அழகுபெற்றிருக்கின்ற தன்மையைப் பார்த்து மிகவும் அதிசயித்தார்.

நந்தவனத்தைச் சுற்றிப்பார்த்து வரும்பொழுது வில்வ மர நிழலில் உலகமாதாவாகிய பார்வதி தேவியார் அமர்ந்து இருக்கின்ற தன்மையைக் கண்டார். கண்டவுடனே அடியற்ற மரம்போலப் பூமியில் வீழ்ந்து வணங்கி எழுந்துநின்று, "தாயே! திருக்கைலாச கிரியைவிட்டு அடியேனது ஆசிரமத்துக்கு எழுந்தருளி வந்து காட்சியளித்தருளிய தன்மைக்கு யான் என்ன தவம் செய்தேனே?" என்று தோத்தரித்து வணங்கி நின்று "தாயே! தாங்கள் பூலோகத்துக்கு எழுந்தருளி வந்தது யாதோ?" எனக் கேட்டார். பார்வதி தேவி கைலாசத்தில் நடந்த சம்பவங்களையெல்லாம் கூற முனிவர் கேட்டு அம்மையாரைச் சிம்மாசனம் ஒன்றில் எழுந்தருளச் செய்து வேண்டும் உபசாரங்கள் செய்து வணங்கி நின்றார்.

பார்வதி தேவியார் கௌதம முனிவரை நோக்கி "தபோதநரே! யான் சிவபெருமானது வாமபாகத்திற் கலந்துகொள்ளும் பொருட்டு இப்பூவுலகத்தில் ஓர் விரதம் அநுட்டிக்க

வேண்டும். மிகவும் மகத்துவம் நிறைந்த விரதமொன்றும், அதனை அனுஷ்டிக்கும் முறைமையும் உரைத்தல்வேண்டும்'' எனக் கேட்டார். முனிவர் ''தாயே! பூவுலகில் அனுஷ்டிக்கப்படும் சிறந்த விரதம் ஒன்றுண்டு. கேதாரீஸ்வரர் விரதம் (கேதார விரதம்) என்று அதற்குப் பெயர்'' எனக்கூறி அதனை அநுட்டிக்கும் முறையையும் கூறினார். கௌதம முனிவர் கூறியவண்ணம் அம்மையார் இவ்விரதத்தை விதிப்படி அநுட்டித்துப் பரமசிவனை மகிழ்வித்தார். பரமேஸ்வரன் சிவ கணங்கள் புடைசூழ அவ்விடத்திற்கு எழுந்தருளினார். பார்வதி தேவியார் இறைவனை வணங்கி ''சுவாமி! அடியாள் அனுஷ்டித்த இந்த விரதத்தை யாவர் அனுஷ்டித்தாலும் அவர்களுக்கு நீண்ட ஆயுளையும், நல்ல புத்திரப் பேற்றையும் அஷ்ட ஐஸ்வரியங்களையும் கொடுத்து இறந்தபின் உங்களது திருவடித் தாமரைகளை அடைகின்ற பேற்றையும் அனுக்கிரகித்தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் அம்மையாரின் பிரார்த்தனைக்கு அனுக்கிரகம் செய்து, கௌதம முனிவருக்கும் திருக்கண் பாலித்துத் தேவியாரைத் தனது வாமபாகத்திற் சேர்த்து அர்த்தநாரீஸ்வரராகிக் கைலாயத்திற்கு எழுந்தருளினார்.

சித்திராங்கதன் என்னும் கந்தருவன் வச்சிரதேயன் என்னும் அரசனுக்கு இவ்விரத மகிமையை உபதேசித்தான். அவன் அதனை அனுஷ்டித்துப் புதல்வராற் சிறந்து, புகழும் பெருக ஆட்சி புரிந்தான்.

இந்த விரதத்தின் மகிமையை அறிந்த தெய்வ கன்னியர்கள் பூவுலகில் வந்து தங்களால் இருபத்தொரு தினங்களாக இவ்விரதத்தை அனுஷ்டிக்க முடியாமையினால் ஒரேநாளில் அனுட்டிக்க விரும்பினார்கள். அதாவது ஐப்பசி மாதத்து அபரபட்சத்துச் சதுர்த்தசியில் அனுட்டித்தார்கள். குறித்த விரத தினத்தில் கங்கையில் நீராடி ஆசாரசீலர்களாக இருந்து தங்களது நித்திய கருமங்களை முடித்து ஆலமரத்தின்கீழ் சிவலிங்கம் அமைத்துக் குத்துவிளக்கு ஏற்றி சங்கல்பம் சொல்லி சிவலிங்கப்பெருமானுக்கு முறைப்படி அபிஷேக ஆராதனைகளைச் செய்து இருபத்தொரு வெற்றிலை பாக்கு

வாழைப்பழம் இருபத்தொரு மஞ்சள் சந்தனம் வெல்லம் அதிரசம் வைத்துப் படைத்து இருபத்தொரு இழையினு லான நூலை முறுக்கி இருபத்தொரு முடியிட்டு தூப தீப சோடசோபசார பூசனைகளைச் செய்து வில்வார்ச்சனை செய்து தேங்காயுடைத்துப் பஞ்சாலாத்தி காட்டி பிரதட்சண நமஸ் காரம் செய்தார்கள். இதனைப் பார்த்திருந்த புண்ணியவதி. பாக்கியவதி என்ற இரு பெண்களும் தங்களது துன்பமெல் லாம் நீங்கி, தங்களுக்கு நல்ல கணவன் வரவேண்டும் என்று விரும்பித் தெய்வகன்னிகைகள் அனுட்டித்தபடி இவ்விர தத்தை அனுட்டித்தார்கள். விரத பலத்தினுல் அவர்கள் நல்ல இடத்திலே வாழ்க்கைப்பட்டுச் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள். அவர்களுள் பாக்கியவதி என்பவள் செல் வச் செருக்கால் தான் வருடந்தோறும் அநுட்டித்துவந்த விரதத்தை இடையில் விட்டுவிட்டாள். அதன் பலனுகச் செல்வங்கள் எல்லாம் அழிந்தன. சாப்பாட்டுக்கு வழியில் லாமல் கஷ்டப்பட்டாள், ஒருநாள் தனது மகனைத் தனது தமக்கையிடம் சென்று தங்களது நிலைமையைக்கூறிப் பொரு நிதி வாங்கிவருமாறு அனுப்பினுள். அவனும் அவ்வாறே சென்று பெரியதாயிடம் விபரமாகக் கூற, அவள் திரவியங் களை முடிச்சாகக் கட்டிக்கொடுத்து அனுப்பினுள். சிறுவன் முடிச்சைக் கொண்டு வரும்பொழுது பருந்து ஒன்று பறந்து வந்து பணமுடிப்பைக் கொத்திக்கொண்டு சென்றது. இத னைக்கண்ட சிறுவன் மனம்வருந்தி மீண்டும் வந்து பெரிய தாயிடம் முறையிட்டான். அவள் மீண்டும் ஒரு பணமுடிப் பைக்கொடுத்து அனுப்பினுள். சிறுவன் மறுபடியும் பணமுடிப் பைக்கொண்டு வரும்பொழுது கள்வர் கவர்ந்து சென்றுர்கள். சிறுவன் மிகவும் வருந்தி மீண்டும் பெரியதாயிடம் வந்து முறையிட்டான். பெரியதாயார் யோசித்துப் பார்த்து இது ஏதோ குறைபாடாக இருக்கவேண்டும் என்று மனத்திலே எண்ணிக்கொண்டு சிறுவனை அழைத்து, "தம்பி உமது தாயார் இப்பொழுதும் விரதம் அனுட்டித்து வருகின் ருரா?" எனக்கேட்டார். சிறுவன், "அம்மா இப்பொழுது விரதம் அனுட்டிப்பதில்லை" எனக்கூறினுன். உடனே அவள் "தம்பி உமது தாயார் விரதத்தை இடையில் அநுட்டியாது

விட்ட குறையினால்தான் உங்களுக்கு இவ்வளவு துன்பமும் ஏற்பட்டது'' என்று கூறிச் சிறுவனைத் தன்னுடைய வீட்டில் வைத்துக்கொண்டு, ஐப்பசிமாத சதுர்த்தசி அமாவாசை தினத்திலே தனது சகோதரிபேரிலும் விரதத்தை முறைப்படி அனுட்டித்து விரத காப்பையும் பிரசாதங்களையும் சிறிது திரவியத்தையும் சிறுவனிடம் கொடுத்து இந்த விரத காப்பைக் கையிலே கட்டிக்கொண்டு வருடந்தோறும் விரதத்தைத் தவறாது அனுட்டிக்குமாறு தாயிடம் கூறும்படி சொல்லி உதவிக்கு ஒரு ஆளையும் சிறுவனுடன் அனுப்பிவைத்தாள்.

சிறுவன் செல்கின்றபொழுது விரத பலத்தினால் முன் பறித்துக்கொண்டுபோன பருந்து திரவியத்தைக் கொண்டுவந்து போட்டது. திருடன் திரவியத்தைக் கொண்டுவந்துகொடுத்தான். இவற்றையெல்லாம் பெற்றுக்கொண்டு சிறுவன் தாயாரிடம் கொடுத்து நடந்த விசயங்களை விபரமாகச் சொன்னான். பாக்கியவதியும் தான்விட்ட தவறை உணர்ந்து கேதாரீஸ்வரரை வணங்கிக் காப்பை வாங்கிக் கையிலே கட்டிக்கொண்டாள்.

விரத பலத்தினாலே மீண்டும் செல்வமெல்லாம் வந்து சேர்ந்தன. அவள் தனது வாழ்நாள் முழுவதும் விரதத்தை அனுட்டித்துச் சகல செல்வங்களையும் பெற்று இறுதியிலே இறைவனது திருவடி நீழலை அடைந்தாள்.

யாமும் கேதாரீஸ்வரர் விரத வரலாற்றை அறிந்து அதன் மகிமையை உணர்ந்து, முறைப்படி அவ்விரதத்தினை அனுட்டித்து நற்கதியடைவோமாக.

சுபம்.

★

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஓம் கணநாததுவாயசிவ



# கேதாரீஸ்வரர் விரத நோன்பு பூஜா விதி

## மந்திர சுலோக தோத்திரங்கள்

இம்மந்திர சுலோகங்கள் பார்வதி தேவியாருக்கு வால்மீக மகரிஷி உபதேசித்ததைப் பரமேஸ்வரி கேட்டு நோன்பு நோற்றுப் பேறு பெற்றதைத் தேவலோகக் கன்னிகைகள் பூலோக மக்களனைவரும் அனுஷ்டிக்கும் காரணமாய்ப் பாக்கியவதி புண்ணியவதிகளுக்குக் கற்பித்தவைகளுமே.

## விக்னேஸ்வர அர்ச்சனை மந்திரங்கள்

ஓம் சுமுகாய நம;
ஓம் ஏகதந்தாய நம:
ஓம் கபிலாய நம:
ஓம் கஜகன்னியாய நம;
ஓம் லம்போதராய நம:
ஓம் விகடாய நம,
ஓம் விக்கினராஜாய நம:
ஓம் விநாயகாய நம:
ஓம் தூமகேதுவே நம:
ஓம் கணாத்யவிநாயக நம:
ஓம் பாலச்சந்திராய நம:
ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் சூர்ப்பகர்ணாய நம:

ஓம் ஹேரம்பாய நம;
ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம:
ஓம் கணபதியே நம:
ஓம் சிவாய நம:
ஓம் கேசவாய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் சங்கராய நம:
ஓம் கங்காதராய நம:
ஓம் நீலகண்டாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் கிருஷ்ணாய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் ஈசானயாய நம:
ஓம் கைலாசவாசாய நம:
ஓம் திரிசூலாய நம:
ஓம் மழுவேந்திராய நம:
ஓம் மானேந்திராய நம:
ஓம் சிவாய நம:
ஓம் சதாசிவாய நம:
ஓம் அச்சுதாய நம:
ஓம் நிர்மாலாய நம:
ஓம் அரூபாய நம;
ஓம் ஆனந்தரூபாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் சூலபாண்யே நம:
ஓம் சிவபூசாய நம
ஓம் காலகண்டாய நம:
ஓம் கபாலமூர்த்தியே நம:
ஓம் பரமகுருவே நம:
ஓம் சாந்தருத்திராய நம:
ஓம் மார்க்கண்டாய நம:
ஓம் திரிபுரதகனாய நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் பார்வதிப்ராணேசாய நம:

ஓம் சற்குருவாய நம:
ஓம் நந்திகேஸ்வராய நம:
ஓம் கேதாரீஸ்வராய நம:

இம் மந்திர சுலோகங்களை முறையாய் அர்ச்சித்து நோன்புக் கயிற்றைக் கழுத்தில் அணிந்துகொண்டு மீண்டும் பாக்கியவதி புண்ணியவதிகள் அர்ச்சித்த மந்திரங்களையும் கூறி வணங்கிக்கொள்ளவும். அர்ச்சிக்கும் பொருள்கள் இவை முறையாகும். அரிசி அறுகு வில்வம் மற்றும் நறுமலர்களும் உதவும்.

ஓம் சிவாய நம;
ஓம் மஹேஸ்பராய நம:
ஓம் சம்புவே நம:
ஓம் பிநாகினே நம
ஓம் சசிசேகராய நம:
ஓம் வாமதேவாய நம:
ஓம் விருபாக்ஷாய நம:
ஓம் நீலலோகிதாய நம:
ஓம் சங்கராய நம:
ஓம் சூலபாண்யே நம:
ஓம் கட்வாநே நம:
ஓம் விஷ்ணுவல்லபாய நம;
ஓம் சிபிவிஷ்கடாய நம:
ஓம் அம்பிகா நாதாய நம:
ஓம் ஸ்ரீ கண்டாய நம:
ஓம் பக்தவத்சலாய நம:
ஓம் பவாய நம:
ஓம் சர்வாய நம!
ஓம் திரிலோகேஹசாய நம:
ஓம் சிதிகண்டாய நம:
ஓம் சிவாப்பிரியாய நம:
ஓம் உக்கிராய நம:
ஓம் கபர்த்திநே நம:
ஓம் காமரியே நம!

ஓம் அந்தகாசுரசூராய நம;
ஓம் கங்காதராய நம:
ஓம் லலாடஷ்ஷாய நம:
ஓம் காலகாலாய நம:
ஓம் கிருபாநிதயே நம:
ஓம் பீமாய நம:
ஓம் பரசு அஸ்ததாய நம:
ஓம் மிருகபாணியே நம:
ஓம் சடாதராய நம:
ஓம் கைலாஸ வாசினே நம:
ஓம் கவசிநே நம:
ஓம் கடோராய நம:
ஓம் திரிபுராந்தகாய நம:
ஓம் விரிஷாங்காய தம:
ஓம் விருஷபாரூடாய நம:
ஓம் பாஸ்மோத்தூளித விக்கிரகாய நம:
ஓம் ஸாமப்பிரியாய நம:
ஓம் ஸர்வம்யாய நம:
ஓம் அநீஸ்பராய நம:
ஓம் ஸர்வஞ்ஞாய நம:
ஓம் தரஜமூர்த்தியே நம:
ஓம் பரமாத்மநே நம:
ஓம் சோமசூரியாக்கிநீலோகநாய நம:
ஓம் அவிக்ஷே நம:
ஓம் யக்ஞமயாய நம:
ஓம் சோமாய நம:
ஓம் பஞ்சவத்திராய நம:
ஓம் சதாசிவாய நம:
ஓம் விஸ்வேசாய நம:
ஓம் வீரபத்திராய நம:
ஓம் கணநாதாய நம:
ஓம் பிரசாபதியே நம:
ஓம் இரணியரேதசே நம:
ஓம் துர்த்ருஷாய நம:

ஓம் கிரிசாய நம:
ஓம் அநகாய நம:
ஓம் அருபாய நம:
ஓம் புஜங்கபூஷணாய நம:
ஓம் பர்க்காய நம:
ஓம் கிரதந்திவிநே நம:
ஓம் கிர்த்திவாசமே நம:
ஓம் புராரதையே நம:
ஓம் பிரமதரதிபாய நம:
ஓம் மிரத்தியுஞ்சாய நம:
ஓம் சூட்சமதனுவே நம:
ஓம் ஜகத்யாப்பியோ நம:
ஓம் ஜகத்குருவே நம:
ஓம் வியோமகேசாய நம:
ஓம் மகாஜனந்தராய நம:
ஓம் மகாஜனகாய நம:
ஓம் சாருவிக் ரகாய நம:
ஓம் ருத்ராய நம:
ஓம் பூதயதயே நம:
ஓம் ஸ்தாணுவே நம:
ஓம் அகிற்பத்தினியாய நம:
ஓம் திகம்பராய நம:
ஓம் அஷ்ட மூர்த்தயே நம:
ஓம் அநேகாத்மனே நம:
ஓம் சாத்திவிக்கிரகாய நம:
ஓம் சுத்தவிக்கிரகாய நம:
ஓம் சாஸ்வதாய நம:
ஓம் கண்டபிரசவே நம:
ஓம் அஜாய நம:
ஓம் பாசவிமோசகாய நம:
ஓம் ஸாம்பாய நம:
ஓம் மிருடாய நம:
ஓம் பசுபதியே நம:
ஓம் தேவாய நம:

ஓம் மகாதேவாய நம:
ஓம் அவ்வியாய நம:
ஓம் அரேய நம:
ஓம் பகநேத்ராதயே நம:
ஓம் தட்சத்துவரஹாய நம
ஓம் ஹரயே நம:
ஓம் அவ்வியத்தாய நம:
ஓம் சகஸ்ராஷாய நம:
ஓம் சகஸ்திரபதயே நம:
ஓம் சவ்வர்க்கபிரதாய நம:
ஓம் அபவர்க்காய நம :
ஓம் சுனந்தாய நம:
ஓம் அனந்தகாய நம:
ஓம் தாரகாய நம:
ஓம் பரமேசாய நம:

திருச்சிற்றம்பலம்

விண்ணினி லொளியாய் விளக்கினிற் சுடராய்
வெயிலவன் கதிரென விளங்கும்
கண்ணிலின் மணியாய் மணியினி லுருவாய்
கருத்தினிற் கலந்திடுக் குழையார்
எண்ணிதிற் கமையா ஈசனே சிவமே
எம்பெரும் வினைகளை யெரிக்க
நண்ணுமோ கருணை நல்குமோ அறியோம்
நாடிடும் கௌரியம் பரனே.

சிவ சிவ சிவ சிவ சிவ்வா

இதன் விருத்தாந்தங்களைக் கேதாரீஸ்வர புராணத்திலும், நோன்புக் கதையிலும் அறியவும்.

உ

தேவி துணை

ஓம் சக்தி

# கௌரிக்காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையவளைத்தே அருள்மாரி பொழிந்தானே.
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு [வாய்

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விளைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லவையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியளே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்

நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமது
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

திருச்சிற்றம்பலம்

# அம்பிகாபதி
## பான்சி றேடர்ஸ்

சகலவித அழகுசாதனப் பொருட்கள்

- விளையாட்டுப் பொருட்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- சாய்ப்புச் சாமான்கள்
- கோல்ட் கவறிங் நகைகள்
- நூல்வகைகள்
  - மொத்தமாகவும்
  - சில்லறையாகவும்
  - மலிவாகவும்

பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்

9, நவீன சந்தை : யாழ்ப்பாணம்

தொலைபேசி: 24822, 23482


சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம். போன்: 23002